யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்
புத்தூர்

# பரிசளிப்பு விழா — 2009

காலம் :- 06-08-2009 வியாழன் காலை 9.00 மணி

இடம் :- பாடசாலை மண்டபம்

தலைமை :- **திரு. கு. ரவிச்சந்திரன்** (அதிபர்)

**பிரதமவிருந்தினர்**

கௌரவ **கே. என். டக்ளஸ் தேவானந்தா** அவர்கள்
(சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்)

**சிறப்பு விருந்தினர்**

கலாநிதி. **த. கலாமணி** அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்கள்**

**திரு. இ. இராஜமகேந்திரன்** அவர்கள்
(அதிபர் யா/ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர்)

**திரு. G. இரத்தினசிங்கம்** அவர்கள
(ஆசிரிய நிலைய முகாமையாளர், யாழ் கல்வி வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள்*
1.08.2009 *ப.ா.அ.சங்கம், ப.மா.சங்கம்*

# நிகழ்ச்சிநிரல்

01. விருந்தினர் அழைத்தல்

02. மங்கல விளக்கேற்றல்

03.தேசியக் கொடி யேற்றல்

04. பாடசாலை கொடியேற்றல்

05. இறைவணக்கம்

06.தமிழ்தாய் வாழ்த்து

07. வரவேற்புரை

08. அதிபர் அறிக்கை

09. மாணவர் உரை

10. சிறப்பு விருந்தினர் உரை

11. பிரதம விருந்தினர் உரை

12. பரிசில் வழங்கல்

13. நன்றியுரை

14. கலை நிகழ்ச்சிகள்

15. பாடசாலைக் கீதம்

## அதிபர் அறிக்கை – 2009

எல்லாம் வல்ல இறையருளை நினைந்து வணங்கி இன்றைய எமது பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய சமூகசேவைகள், மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கௌவரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களே, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் உயர்திரு. கலாநிதி. த.கலாமணி அவர்களே, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் யா/ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி அதிபர் திரு.இ.இராஜமகேந்திரன் அவர்களே, மற்றும் யாழ் கல்வி வலய ஆசிரிய நிலைய முகாமையாளர் திரு.ஞா.இரத்தினசிங்கம் அவர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, அன்பான மாணவச் செல்வங்களே, பாதுகாப்பத் தரப்பினரே, நண்பர்களே,அனைவருக்கும் அன்பு கலந்த காலை வந்தனங்கள்.

இன்றைய முதன்மை விருந்தினர் கௌவரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களே, தாங்கள் இன்றைய நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு இப்பாடசாலையும் சமூகமும் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றது.

சிதைந்து போயுள்ள எமது பிரதேசத்தை கட்டியெழுப்புவதற்கும், எம்மவர் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தாங்கள் ஆற்றும் பணியை மெச்சுகின்றோம். பல்வேறு பணிப்பழுக்களின் மத்தியிலும் இன்றைய விழாவிற் கலந்து கொள்வதையிட்டு மனம் மகிழ்ந்து பாடசாலைச் சமூகம் சார்பாக தங்களை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சிறப்பு விருந்தினர் கலாநிதி.த.கலாமணி அவர்களே ஆசிரிய வாண்மைவிருத்தி நோக்கில் யாழ்பாணப் பல்கலைக் கழகத்தினூடாக தாங்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது. அவுஸ்ரேலிய வொலொங்கொங் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு யாழ் பல்கலைக் கழகத்தின் கல்விப்பீட முதன்நிலை விரிவுரையாளராகத் தாங்கள் ஆற்றிவரும் பணியை வியந்து தங்களிடம் கற்றவனென்ற வகையில் பாராட்டுவதுடன் தாங்கள் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பிரதேசத்தின் மூலாதாரப் பாடசாலையாகத் திகழும் யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் திரு.இ.இராஜமகேந்திரன் அவர்களே, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தையும், யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வியில் முதுமாணிப்

பட்டத்தையும் பெற்று அண்மையில் எமது பிரதேசத்தில் இணைந்துள்ள தாங்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் ஆசிரியர்களை தொழில்சார் உயிரோட்டம் கொண்டவர்களாகவும் வகுப்பறைக் கற்பித்தலில் நவீன உபாயங்களை ஊடுகடத்துபவர்களாகவும் உருவாக்க முயன்று உழைக்கும் ஆசிரிய நிலைய முகாமையாளர் யாழ் பல்கலைக் கழகத்தில் கல்வியில் முதுமாணி உயர் திரு. ஞா. இரத்தினசிங்கம் அவர்களே தங்களும் இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பரிசுத்தினம்

அனைவர்க்கும் தரமான கல்வி என்ற பொதுநோக்குடன் முன்னெடுக்கப்படும் நவீன கற்றற் செயற்பாட்டில் உரிய பிரிவினர் அதற்குரிய தேர்ச்சிகளை அடைந்துள்ளார்களாவென்பதை நாடிபிடித்தறிவதாக தவணை இறுதிக்கணிப்பீடுகள் அமைகின்றன. இந்தவகையில் இன்று நடைபெறும் பரிசுத்தினத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுவது 2008 இல் நடைபெற்ற மூன்று தவணை இறுதிப் பொதுக் கணிப்பீட்டில் மாணவர் பெற்றுக் கொண்ட புள்ளிகளும் அவ்வாண்டில் நடைபெற்ற இணைபாடவிதானச் செயற்பாட்டில் காட்டிய ஈடுபாடுகளுமாகும் என்பதை முதற்கண் குறிப்பிட விரும்புகின்றேன்.

இப் பரிசுத்தினத்தை ஆண்டுதோறும் நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் கற்றற் செயற்பாட்டில் அவர்களின் நாட்டத்தை உயர்ந்தநிலைக்கு இட்டுச் செல்லலாம் என்ற உயர்வான எண்ணத்துடன் இந் நிகழ்வுக்குப் பின்புலம் அமைத்து பரிசு நிதியத்தை ஏற்படுத்திய வள்ளல்களுக்கு நன்றி கூற கடைமைப்பட்டுள்ளேன்.

இப்பாடசாலை முதலாவது அதிபர் அமரர் க.முருகேசு அவர்களின் ஞாபகார்த்தமாக அவர் தம் குடும்பத்தினர் உதவிய 50,000 மற்றும் இப்பாடசாலையில் கற்பித்துக்கொண்டிருக்கும் போதே உயிர் நீத்த அமரர் கா.லங்கேசன் ஆசிரியரின் குடும்பத்தின் உதவிய 20,000 மற்றும் முன்னாள் அதிபர் திரு. நா.சிவஞானம் அவர்கள் அன்பளிப்புச் செய்யப்பட்ட ரூபா 10,000 மொத்தம் 80,000 நிலையான வைப்பாக அச்சுவேலி இலைங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அதன் வட்டிப் பணமே இன்றைய பரிசுப் பொருள் வாங்கப் பயன்படுத்தப்படடுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

## கல்விச் செயற்பாடுகள்

அபிவிருத்திகான திறவுகோலாக அமைவது கல்வியாகும். இது மனிதனின் வாழ்க்கைக்கான அடிப்படையை ஏற்படுத்தி தருவது. அடிப்படைக் கல்வி, தொடருறுகல்வி வாழ்நாட்கல்வி என்ற வகையில் மாணவர் கற்று பயனுள்ள அறிவை,

பொருத்தமான விழுமியங்களை, நல்மனப்பாங்குகளை திறன்தகவுகளை அடைந்து தாமும் வாழ்ந்து சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ள பிரஜைகளாக மிளிர வேண்டும்.இந் நன் நோக்கத்தை எய்தும் வகையில் எமது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் ஆரோக்கியமான தடத்தில் வீறு நடைபோடுகின்றது என்பதை ஆணித்தரமாக குறிப்பிட விரும்புகின்றேன்.

நவீன உலகின் தொழில் உலகிற்கு வேண்டிய தேர்ச்சிகளை வளர்ப்பதாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படும் நவீன கலைத்திட்டச் செயற்பாடுகள் அனைத்தும் எமது பாடசாலையிலும் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.இதற்கு கல்வித்திணைக்களத்தின் ஆதரவும் ஆலோசனை வழிகாட்டல்களும் போதியளவு கிடைத்து வருகின்றது.

அன்பான பெற்றோர்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை எம்மிடம் அனுப்புங்கள் அவர்களுக்கு வேண்டிய நிறைவான கல்வியை வழங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம் என்பதை இச்சந்தர்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை அளவிடுவதற்கான அளவுகோல் பொதுப் பரீட்சைகளாகும். ஆந்த வகையில் எமது பாடசாலையை அளவிடுவதற்கான இரண்டு பொதுப் பரீட்சைகள் உள்ளன. ஒன்று

புலமைப்பரிசில் பரீட்சை, மற்றையது க.பொ.த.சாதாரணப் பரீட்சை.

2008ம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில் பரீடசையிலே துரதிருஷ்டவசமாக ஒரு மாணவன் ஒரு புள்ளியால் சித்திப் புள்ளியை எட்டமுடியாது போய்விட்டது மு.தினுஜன் (113) என்ற அந்தமாணவனைப் பாராட்டுகின்றேன். மற்றும்100 புள்ளிக்கு மேற் பெற்ற சி.சிந்தாரகன் (103) ஆகிய மாணவனையும் பாராட்டுகின்றேன்.

2008 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையிலே 16 மாணவர் பரீட்சைக்குத் தோற்றி ஆறு மாணவர்கள் தற்பொழுது க.பொ.த. உயர்தரம் கற்றுக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் கணிதம் தமிழ் அடங்கலாக ஆறுபாடங்கள் சித்தியடைந்து உயர்தரத்திற்கு பூரண தகமை பெற்ற செல்வன் த.கயன் (2A,B,5C,) செல்வன் ஆ.கீர்த்திகன் (A,2C,5S) ஆகிய அாணவர்களையும், இவர்களின் வெற்றிக்கு அயராது உழைத்த ஆசிரியர்களையும் இச்சந்தர்பத்தில் பாராட்டுகின்றேன்.

முகாமைத்துவம்

எமது பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாடகளை முன்னெடுப்பதில் முகாமைத்துவக் குழு பெரும் பங்காற்றுகின்றது. என்னுடன் உபஅதிபர் திரு. சி.ஸ்ரீஇராகவன் சிரேஷ்ட ஆசிரியர் நா.மகேந்திரராசா சிரேஷ்ட ஆசிரியைகள்

திருமதி பாமா உதயகுமார், திருமதி சு.தவராசகுமாரி ஆகியோர் முகாமைப் பணியாற்றகின்றனர். ஆவர்களையும் இந்நாளில் பாராட்டகின்றேன்.

## ஒழுக்காற்றுக் குழு

மாணவர்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்துவது ஒழுக்காற்றுக் குழுவாகும். இதில் ஆண்பிள்ளைகளுக்குப் பொறுப்பாக திரு.கு.சுந்தரசெல்வன் அவர்களும் பெண்பிள்ளைகளுக்குப் பொறுப்பாக திருமதி பாமாஉதயகுமார் அவர்களும் பணியாற்று கின்றனர்.அத்துடன் ஆரம்பபிரிவு ஒழுக்காற்றுக்கு திருமதி.செ.சிவசக்திவேல், செல்வி.மா. யோகராணி ஆகியோரும் பங்களிப்பு நல்குகின்றனர். இவர்களின் சிபார்சின்படி மாணவமுதல்வர் தெரிவு இடம்பெறுகின்றது.இவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

## மாணவர் முதல்வர் குழு

தலைமைத்துவப் பயிற்சியை பாடசாலை பருவம் முதல் வழங்கும் நோக்குடன் மாணவர் முதல்வர் குழு நடைமுறை செயற்படுத்தப்படுகின்றது. ஆதற்குப் பொறுப்பாக திரு. நா.மகேந்திரராசா ஆசிரியர் செயற்படுகின்றார். ஆண்டு தோறும் மணவமுதல்வர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னஞ்சூட்டல் வைபவமும் நடைபெற்று வருபகின்றது. இவ்வாண்டின் சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன் செ.மணிமாறன் அவர்களும் சிரேஷ்ட மாணவ தலைவியாக

செல்வி பு.கபிலா அவர்களும் செயற்படுகின்றனர். அவர்களையும் இத்தினத்தில் பாராட்டுகின்றேன்

### விளையாட்டுக்குழு

கற்றல் செயற்பாட்டில் விளையாட்டின் பங்கும் பணியும் யாவரும் அறிந்ததே எமது பாடசாலையின் விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பாக திரு.க.ரவீந்திரன் ஆசிரியர் அவர்கள் இருக்கின்றார்.அவரது நேரடி வழிநடத்தலின் கீழ் ஆண்டு தோறும் இல்ல மெய்வல்லுனர் போட்டி நடைபெற்று வருவதுடன் கோட்ட மெய்வல்லுனர்,உதைபந்து, வலைப்பந்து, தாச்சிப்போட்டிகளிலும் மாணவர் உற்சாகத்துடன் பங்குபற்றி பாராட்டு பெறுகின்றனர்

### மாணவர் தொகை

எமது பாடசாலையில் தற்பொழுது 222 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் இவர்களில் 76 மாணவர்கள் ஆரம்ப்பிரிவிலும் 146 மாணவர் இடைநிலைப் பிரிவிலும் கற்கின்றனர் பாடசாலையின் மொத்தமாணவர் தொகையில் 125 ஆண்பிள்ளைகளும் 97 பெண் பிள்ளைகளும் அடங்குவர்.

### மன்றங்கள் கழகங்கள்

எமது பாடசாலையில் மாணவரின் கற்றற் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு மன்றங்கள் இயங்குகின்றன இம்மன்றங்கள் எல்லாவற்றுக்கும் தலையானது மாணவர்

மன்றம் ஆகும். இதன் பொறுப்பாசிரியராக திருமதி சு.தவராசகுமாரி ஆசிரியை அவர்கள் செயற்படுகிறார். நடப்பாண்டின் தலைவராக செல்வன் டை.விநோத் அவர்களும் செயலாளராக செல்வி தெ.மேர்சி அர்களும் பொருளாளராக செல்வன் த.மதுர்ஷனும் செயற்படுகின்றனர்.

அடுத்து இந்துமாமன்றம் சிறப்பாக இயங்குகின்றது. வெள்ளி தோறும் விசேட ஆராதனைகளையும் சமயச் சொற்பொழிவு மற்றும் நவராத்திரி விழா என்பன இதன் சிறப்பான பணிகள் இதன் பொறுப்பாசிரியராக உப அதிபர் திரு.சி.ஸ்ரீ இராகவன் அவர்களும் சங்கீத ஆசிரியை திருமதி. சு. தயாபரன் அவர்களும் செயற்படுகின்றனர். செல்வி.கு.தர்ஷிகா தலைவராகவும் செல்வி தி. கனிஸ்ரா செயலாளராகவும் இவ்வாண்டில் செயற்படுகின்றனர்.

அடுத்து கணித விஞ்ஞான மன்றம் இணைந்து செயற்படுகின்றது.இதன் இணைப் பொறுப்பாசிரியர்களாக திரு.நா.மகேந்திரராசா திரு கு.சுந்தரசெல்வன் ஆகியோர் விளங்குகின்றனர். செல்வன் செ.வாசகன் தலைவராகவும் செல்வி. ஆ.கீதாஞ்சலி செயலாளராகவும் இவ்வாண்டில் இயங்குகின்றனர்

அடுத்துக்குறிப்பிடக்கூடியது சுகாதார மன்றமாகும் மாணவரின் பொதுச் சுகாதாரம் உடல் உள ஆரோக்கியம் என்பவற்றுக்கு வேண்டிய வழிகாட்டல்கள் இம் மன்றத்தினூடாக வழங்கப்படுகின்றது. இதன்

பொறுப்பாசிரியராக செல்வி. மா.யோகராணி செயற்படுகின்றார்.செல்வன் த.மதுர்சன் தலைவராகவும் செல்வி ம.டேனுகாசினி செயலாளராகவும் இவ்வாண்டில் செயற்படுகின்றனர்.

மேலும் இவ்வாண்டில் எமது பாடசாலையில் கணினி அறிவை மேம்படுத்தும் முகமாக தகவற் தொடர்பாடல் தொழினுட்பக் கழகம் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் பொறுப்பாசிரியராக திரு.சி.பிரகாசன் அவர்கள் செயற்படுகின்றார். நடப்பாண்டில் இம்மன்றத்தின் தலைவராக செல்வி தெ. மேர்ஷி அவர்களும் செயலாளராக செல்வன் செ. வாசகனும் செயற்படுகின்றனர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இம்மன்றத்தினூடாக இரண்டு மாதம் கொண்ட பயிற்சி நெறி ஒன்று நடாத்தி அவர்களுக்கான சான்றிதழ்களும் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்கள் அண்மையில் வழங்கியிருந்தார் தொடர்ந்து 6 -9 வரையான மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி நெறி ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

அடுத்து ஆங்கில மன்றமும் செயற்திறனுடன் இயங்கி வருகின்றது. இதன் பொறுப்பாசிரியர்களாக திரு.க. கபிலன் ஆசிரியரும் திருமதி த.நகுலன் ஆசிரியரும் செயற்படுகின்றனர்.இதன் தலைவராக செல்வி ந.மீராவும் செயலாளராக செல்வி பு.கபிலாவும் நடப்பாண்டில் இயங்குகின்றனர்.

## ஆசிரியர் இணைவும் அகல்வும்

எமது பாடசாலையில் தற்பொழுது பன்னிரண்டு நிரந்தர ஆசிரியர்களும் நான்கு தற்கலிக ஆசிரியர்களும் ஒரு பகுதிநேர ஆசிரியரும் ஒரு தொண்டர் ஆசிரியரும் என மொத்தம் பதினெட்டு ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றேம். எனினும் சித்திர பாடத்திற்கு வெற்றிடம் நிலவுகின்றது.

இக்காலப் பகுதியில் எமது குழாத்தில் புதிதாக மூன்று நிரந்தர ஆசிரியர்களும் இரண்டு தற்காலிக ஆசிரியர்களும் இணைந்துள்ளனர். திருமதி. தர்சிஜா நகுலன் (B.B.A) பட்டதாரி, திருமதி சபீதா கருணாமூர்த்தி (B.A) பட்டதாரி இவர்கள் புதிதாக ஆசிரியப் பணியில் கால்பதித்துள்ளனர் இவர்களை இன்முகத்துட ன் வரவேற்கிறேன். திரு.சி.பிரகாசன் கற்பித்தல் டிப்ளோமா விஞ்ஞானம் அவர்கள் பு/நுரைச்சோலை முஸ்லிம் மகாவித்தியலத்தில் இருந்து இடமாற்றமாகி வந்துள்ளார். அவரையும் வரவேற்கின்றேன். திரு.க.கபிலன் ஆங்கிலப் பயிற்சி ஆசிரியர் மு/பாலிநகர் மகா வித்தியாலயம் பாடசாலையின் ஆசிரியர் திரு.நா.நாநேந்தன் (B.A) கிளி/கனகராயன் குளம் ம.வி ஆசிரியர் எமது பாடசாலைக்கு தற்காலி இணைப்பில் பணியாற்ற வந்துள்ளனர் மற்றும் திரு.சி.சிவகரன் (விவசாயப்பயிற்சி) ஆசிரியர் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து இரண்டு தினம் பகுதி

நேரமாக கடமையாற்ற இணைந்துள்ளார் இவர்களையும் வரவேற்கிறேன்.

மேலும் எம்முடன் பணியாற்றி அயற்பாடசாலையான யா/அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு.து.இராஜரஞ்சன் (விவசாயப் பயிற்சி) அவர்களையும், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற செல்வி.கவிதா சுந்தரம் பிள்ளை அவர்களையும் 2008 ம் ஆண்டில் யாழ் கல்விக் கல்லூரியில் இருந்து உள்ளகப் பயிற்சிக்கென இணைந்து பணியாற்றிய திரு.ஜெ.ஜெசீபன் (விசேடகல்வி) செல்வி சி.நாராயணி (ஆரம்பக் கல்வி) இவர்களையும் வாழ்த்துகின்றேன்.

## ஆசிரியர் கழகம்

ஆசிரியர்களின் நலன்களைக் கவனிப்பதுடன் அவர்களிடையே சுமூக உறவை ஏற்படுத்தும் நோக்குடன் ஆசிரியர் கழகமானது செயற்பட்டுவருகின்றது. இடமாற்றம், பதவியுயர்வு, ஓய்வு என்பவற்றின் போது பாராட்டுவிழாக்களை நடாத்துவதுடன் அவர்களின் குடும்பநிகழ்வுகளில் கலந்து கொண்டு சுகதுக்கங்களில் பங்கெடுத்து வருகின்றது. இதன் தலைவராக திரு.சி.ஸ்ரீஇராகவன் அவர்களும் செயலாளராக திருமதி சு.தவராசகுமாரி அவர்களும் பொருளாளராக திருமதி செ.சிவசக்திவேல் அவர்களும் பணியாற்றி வருகின்றனர்

## தேவைகள்

01.நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கும் சித்திரம் நடனம்ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் தேவை.

02.மனையியல் விவசாயம் மற்றும் சங்கீத பாடங்களுக்கான தனி அறைகள் தேவை.

03.W.F.P செயற்திடத்திற்கான நிரந்தர சமையலறை ஒன்று தேவை.

04.பாடசாலை வளவை அறுக்கைப்படுத்துவதற்கான எல்லைச் சுவர்கள்

05.விளையாட்டு மைதானத்தைச் செப்பனிடுதலும் எல்லைப்படுத்துதலும்

06.புதிய கட்டிடத்தில் அமைந்துள்ள நூலகத்தைச் செயற்படுத்துவதற்கான தளபாடங்களும் புத்தகங்களும் தேவை.

07.எமது பாடசாலையின் பெயரிலுள்ள புத்தகலட்டி என்ற செல்லை நீக்கி யா/ஸ்ரீ விஷ்ணுவித்தியாலம் என பாவிப்பதற்கான கல்வி அமைச்சின் அனுமதி தேவை.

## நன்றிகள்

எமது பாடசாலை நன்கு இயங்குவதற்வேண்டிய ஆற்றுப்படுத்தல்களையும் பல்வேறு வளங்களையும் வழங்கும் வலயக்கல்விப் பணிப்பாளர், அவர் தம் அலுவலர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், அவர்தம் உதவியாளர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள்

மேலும் இன்றைய மகிழ்ச்சியான நன்நாளில் இவ்விழாவை அலங்கரிக்கவென தமது பணிகளை ஒதுக்கி விட்டு வந்தமர்ந்திருக்கும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள் மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள, பழையமாணவர்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி எனது அறிக்கையை முடிக்கின்றேன்

2009.08.06
திரு .கு.ரவிச்சந்திரன்

அதிபர்

## 2009 தரம் 01 சிறப்பு பரிசு பெறுபவர்கள்

01. ஜெ. ஜெதுசன்    02. ற. காவியா    03. டே.றேணுஜா

04. தெ. குபேந்தினி  05. லோ.யாழினி

## பரிசு பெறும் மாணவர் பெயர் விபரம் – 2008

### தரம் – 01

| | | |
|---|---|---|
| 01. ப.ஹம்சத்வனி | - சமயம் தமிழ் கணிதம் | |
| | -சுற்றாடல் அழகியல் | - 1ஆம் இடம் |
| 02. வி.விமர்சியன் | - கணிதம் சுற்றாடல் | -1ஆம் இடம் |
| | - தமிழ் அழகியல் | - 2ஆம் இடம் |
| | - சமயம் | - 3ஆம் இடம் |
| 03. நா.அருண் | - கணிதம் | - 1ஆம் இடம் |
| | - சமயம் | - 2ஆம் இடம் |
| | - தமிழ் சுற்றாடல் | - 3ஆம் இடம் |
| 04. க.கேனசிகா | - கணிதம் | - 1ஆம் இடம் |
| | - அழகியல் | - 3ஆம் இடம் |
| 05. ந.ஸனந்திகா | - கணிதம் | - 1ஆம் இடம் |

### தரம் – 02

| | | |
|---|---|---|
| 01. பி.ஷாலமன் | - சமயம் தமிழ் கணிதம் | - 1ஆம் இடம் |
| | - சுற்றாடல் | - 2ஆம் இடம் |
| | - அழகியல் | - 3ஆம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 02. | ர.கௌதமி | - சுற்றாடல் அழகியல் | - 1ஆம் இடம் |
| | | - தமிழ் கணிதம் | - 3ஆம் இடம் |
| 03. | த.விதுசாந்நான் | - கணிதம் அழகியல் | - 2ஆம் இடம் |
| | | - சுற்றாடல் சமயம் | - 3ஆம் இடம் |
| 04. | த.அபிநயா | - சமயம் தமிழ் | - 2ஆம் இடம |

## தரம் – 03

| | | | |
|---|---|---|---|
| 01. | ந.கவிஸ்னா | - சமயம் கணிதம் | |
| | | -சுற்றாடல் ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| | | - அழகியல் | - 2ஆம் இடம் |
| 02. | கு.சுலக்ஷன் | - தமிழ் அழகியல் | - 1ஆம் இடம் |
| | | - சுற்றாடல் சமயம் | - 2ஆம் இடம் |
| | | - ஆங்கிலம் கணிதம் | - 3ஆம் இடம் |
| 03. | சி.சஜிந்தன் | - தமிழ் | - 1ஆம் இடம் |
| | | - சமயம் | - 3ஆம் இடம் |
| 04. | சி.சரத்வாஜ் | - கணிதம் ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| | | - தமிழ் சுற்றாடல் | - 3ஆம் இடம் |
| 05. | உ.லென்சனா | - அழகியல் | - 3ஆம் இடம் |

## தரம் – 04

| | | | |
|---|---|---|---|
| 01. | உ.தரனிகன் | - சமயம் கணிதம் | |
| | | -சுற்றாடல் அழகியல் | - 1ஆம் இடம் |
| | | - தமிழ் | - 2ஆம் இடம் |

| | | |
|---|---|---|
| 02. அ.கேனசிகா | - தமிழ் ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| | - கணிதம் | - 2ஆம் இடம் |
| 03. வி.பவிக்னா | - சமயம் ஆங்கிலம் | |
| | - அழகியல் | - 2ஆம் இடம் |
| 04. ர.கௌதமன் | - சுற்றாடல் | - 2ஆம் இடம் |
| | - அழகியல் | - 3ஆம் இடம் |
| 05. க.கபினா | - சமயம் கணிதம் | |
| | - சுற்றாடல் தமிழ் | - 3ஆம் இடம் |

### தரம்– – 05

| | | |
|---|---|---|
| 01. மு.தினுஜன் | - சமயம் தமிழ் கணிதம் | |
| | -சுற்றாடல் அழகியல் | |
| | -ஆங்கிலம் | - 1ஆம் இடம் |
| 02. மு.தினோஜன் | - கணிதம் சுற்றாடல் | |
| | - அழகியல சமயம் | |
| | -தமிழ் ஆங்கிலம் | - 3ஆம் இடம் |
| 04. இ.யனுஷா | - தமிழ் | - 2ஆம் இடம் |
| 04. சி.சிந்தாரகன் | - கணிதம் | - 3ஆம் இடம் |

## தரம் – 06

01. மா.தார்மீகன் - தமிழ் சமயம் விஞ்ஞானம்

- ஆங்கிலம் சுகாதாரம் வரலாறு
- செ.தொ.நுட்பம் சங்கீதம்
- புவியியல் குடியுரிமை - 1ஆம் இடம்
- கணிதம் - 2ஆம் இடம்

02. தே.தர்சனா - விஞ்ஞானம் சமயம் தமிழ்

- ஆங்கிலம் சுகாதாரம்
- சங்கீதம தமிழ் - 2ஆம் இடம்
- கணிதம் - 3ஆம் இடம்

03. சி.நிவேதா - புவியியல் பி.தொ.நுட்பம் - 2ஆம் இடம்

04.சி.கிறீஸ்ரீன்சிந்துஜா-கணிதம் - 1ஆம் இடம்

- குடியுரிமை - 3ஆம் இடம்

05. உ.விதுர்சிகா - வரலாறு - 2ஆம் இடம்

- புவியியல் சமயம் தமிழ் - 3ஆம் இடம்

06. ந.பரிமளன் - குடியுரிமை - 2ஆம் இடம்

- விஞ்ஞானம் பி.தொ.நுட்பம் - 3ம் இடம்

07.இ.போல்ஜெபராஜ்- சங்கீதம் - 3ஆம் இடம்

## தரம் – 07

| | | | |
|---|---|---|---|
| 01. | பு.மிதுஷா | - சமயம் தமிழ் கணிதம் விஞ்ஞானம் | |
| | | - ஆங்கிலம் சுகாதாரம் குடியுரிமை | |
| | | - சங்கீதம் புவியியல் | |
| | | -வரலாறு வா.தேர்ச்சி | - 1ஆம் இடம் |
| 02. | ந.கேதுஷன் | - சமயம் தமிழ் கணிதம் | |
| | | - விஞ்ஞானம் ஆங்கிலம் | |
| | | -சுகாதாரம் வரலாறு | - 2ஆம் இடம் |
| | | - குடியுரிமை புவியியல் | - 3ஆம் இடம் |
| 03. | கெ.ரங்காயினி | - புவியியல் | - 2ஆம் இடம் |
| | | - சமயம் கணிதம் ஆங்கிலம் | |
| | | - தமிழ் விஞ்ஞானம் வா.தேர்ச்சி | |
| | | - சுகாதாரம் சங்கீதம் | - 3ஆம் இடம் |
| 04. | வி.தர்சிகா | - வா.தேர்ச்சி குடியுரிமை | - 2ஆம் இடம் |
| 05. | ம.லக்ஷன் | - சங்கீதம் | - 2ஆம் இடம் |
| | | - வரலாறு | - 3ஆம் இடம் |

## தரம் – 08

| | | | |
|---|---|---|---|
| 01. | மு.பார்த்தீபன் | - கணிதம் விஞ்ஞானம் | |
| | | - வரலாறு ஆங்கிலம் சித்திரம் | |
| | | - புவியியல் குடியுரிமை | - 1ஆம் இடம் |
| | | - சமயம் தமிழ் சுகாதாரம் | - 2ஆம் இடம் |

| | | |
|---|---|---|
| 02. வி.சாமினி | - ஆங்கிலம் சமயம் | |
| | - தொழிநுட்பம் சங்கீதம் | - 1ஆம் இடம் |
| | - புவியியல் | - 2ஆம் இடம் |
| | - சுகாதாரம் விஞ்ஞானம் | |
| | - தமிழ் | - 3ஆம் இடம |
| 03. ப.ரகுப்பிரியன் | - சுகாதாரம் | - 1ஆம் இடம் |
| | - கணிதம் விஞ்ஞானம் | - 2ஆம் இடம் |
| | - ஆங்கிலம் தொழிநுட்பம் | |
| | - வரலாறு குடியுரிமை | - 3ஆம் இடம் |
| 04. பா.தமிழினி | - தமிழ் | - 1ஆம் இடம் |
| | - வரலாறு குடியுரிமை | - 2ஆம் இடம் |
| | - சங்கீதம் | - 3ஆம் இடம் |
| 05. அ.சாமந்தி | - தொழிநுட்பம் சங்கீதம் | - 2ஆம் இடம் |
| | - கணிதம் | - 3ஆம் இடம் |
| 06. தே.கிருசிகன் | - சித்திரம் | - 2ஆம் இடம் |

## தரம் – 09

| | | |
|---|---|---|
| 01. ஆ.கீதாஞ்சலி | - சமயம் வரலாறு விஞ்ஞானம் | |
| | - தமிழ் புவியியல் குடியுரிமை | -1ம் இடம் |
| | - சங்கீதம் | - 2ம் இடம் |
| | - சுகாதாரம் | - 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 02. | ந.மீரா - | - ஆங்கிலம் சுகாதாரம் | - 1ஆம் இடம் |
| | | - சமயம் கணிதம் | - 2ஆம் இடம் |
| | | - வரலாறு குடியுரிமை | - 3ஆம் இடம் |
| 03. | தி.கனிஸ்ரா | - சங்கீதம் | - 1ஆம் இடம் |
| | | - தமிழ் சுகாதாரம் வரலாறு | |
| | | - புவியியல் குடியுரிமை | - 2ஆம் இடம் |
| | | - சமயம் கணிதம் | |
| | | - விஞ்ஞானம் ஆங்கிலம் | - 3ஆம் இடம் |
| 04. | ம.தனுசியா | - கணிதம் | - 1ஆம் இடம் |
| | | - ஆங்கிலம் விஞ்ஞானம் | - 2ஆம் இடம் |
| | | - தமிழ் புவியியல் சங்கீதம் | - 3ஆம் இடம் |
| 05. | ந.பிரசாந்தன் | - சித்திரம் | - 1ஆம் இடம் |
| | | - விஞ்ஞானம் | - 2ஆம் இடம் |
| 06. | யோ.அனுசன் | - சித்திரம் | - 2ஆம் இடம் |
| 07. | த.மதுராந்தன் | - சித்திரம் | - 3ஆம் இடம் |

## தரம் – 10

| | | | |
|---|---|---|---|
| 01. | பு.கபிலா | - தமிழ் ஆங்கிலம் | |
| | | - விஞ்ஞானம் சங்கீதம் | |
| | | - வரலாறு விவசாயம் | |
| | | -புவியியல் சமயம் | - 1ஆம் இடம் |
| | | - கணிதம் | - 2ஆம் இடம் |

| | | |
|---|---|---|
| 02. தெ.மேர்ஷி | - கணிதம் கிறிஸ்தவம் | - 1ஆம் இடம் |
| | - புவியியல் விஞ்ஞானம் | |
| | - தமிழ் வரலாறு | |
| | -விவசாயம் ஆங்கிலம | - 2ஆம் இடம் |
| 03. கு.தர்சிகா | - மனையியல் | - 1ஆம் இடம் |
| | - சமயம் | - 2ஆம் இடம் |
| | - தமிழ் ஆங்கிலம் சங்கீதம் | |
| | - புவியியல் வரலாறு | - 3ஆம் இடம் |
| 04. செ.மணிமாறன் | - சித்திரம் | - 1ஆம் இடம் |
| 05. தெ.மெகுமான் | - சித்திரம் | - 2ஆம் இடம் |
| 06. க.கலையரசி | - மனையியல் | - 2ஆம் இடம் |
| 07. த.மதுர்சன் | - சித்திரம் | - 3ஆம் இடம் |
| 08. மிதுலா | - மனையியல் | - 3ஆம் இடம் |
| 09. செ.வாசகன் | - சமயம் விஞ்ஞானம் | |
| | - கணிதம் விவசாயம் | - 3ஆம் இடம் |

## தரம் 11

| | | |
|---|---|---|
| 01. சி.கயன் | - சமயம் தமிழ் கணிதம் | |
| | - விஞ்ஞானம் விவசாயம் | |
| | -புவியியல் வரலாறு | - 1ஆம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 02. | த.யசித்தா | - ஆங்கிலம் சங்கீதம் | - 1ஆம் இடம் |
| | | - கணிதம் | - 3ஆம் இடம் |
| 03. | சி.கயல்விழி | - மனையியல் | - 1ஆம் இடம் |
| | | - கணிதம் தமிழ் | - 2ஆம் இடம் |
| | | - ஆங்கிலம் வரலாறு | - 3ஆம் இடம் |
| 04. | ஆ.கீர்த்திகன் | - சமயம் விஞ்ஞானம் | |
| | | - வரலாறு | - 2ஆம் இடம் |
| | | - புவியியல் விவசாயம் | - 3ஆம் இடம் |
| 05. | செ.பானுகா | - சங்கீதம் மனையியல் | - 2ஆம் இடம் |
| | | - சமயம் தமிழ் ஆங்கிலம் | - 3ஆம் இடம் |
| 06. | ம.தர்சிகா | - ஆங்கிலம் | - 2ஆம் இடம் |
| | | - மனையியல் சங்கீதம் | - 3ஆம் இடம் |
| 07. | துஷியந்தன் | - புவியியல் விவசாயம் | - 2ஆம் இடம் |
| | | - விஞ்ஞானம் சித்திரம் | - 3ஆம் இடம் |
| 08. | தே.தஜராதன் | - சித்திரம் | - 1அம் இடம் |
| 09. | சனுசியன் | - சித்திரம் | - 2ஆம் இடம் |
| 10. | துஷாரகன் | - சங்கீதம் | - 3ஆம் இடம் |

## விசேட பரிசுகள்

01. வி.விமர்சியன் - நீதி நூல் மனனம் -கோ.ம.- சிறப்பு பரிசு

- சிறுவர் சித்திரப்போட்டி -கோ.ம.-சிறப்பு பரிசு

02. செ.மேரிடெலான்சி - மனையியல்

- ஆக்கத்திறன் -கோ.ம. -3ம் இடம்

03. பு.மிதுசா - சமூக விஞ்ஞானப் போட்டி-கோ.ம. -2ம் இடம்

-வ.ம. -2ம் இடம்

04. அழகியல் போட்டி(குழுப் பாடல்) கோ.ம. -3ஆம் இடம்

தெ.மேர்சி ம.தர்சியா ஸ்ரீ.நிதர்சனா ந.தர்ஜனா த.யசித்தா சே.பேபிசா பு.கபிலா செ.மேரிடெலான்சி அ.சாமினி ம.டேணுகாசினி-

05. ச.திலக்ஷன் -13வயது உயரம் பாய்தல் கோ.ம.-1ம் இடம்

06. கு.தர்சிகா -17வயது உயரம் பாய்தல் கோ.ம -1ம் இடம்

07. சி.சிந்தாரகன் -11வயது உயரம் பாய்தல் கோ.ம -2ம் இடம்

08. ர.துஷாரகன் -17வயது நீளம் பாய்தல் கோ.ம -2ம் இடம்.

09. தே.தஜராதன்-17வயது தட்டெறிதல் கோ.ம. -2ம் இடம்

10. ந.பிரசாந்தன் -15வயது 200m கோ.ம -1ம் இடம்

### *க.பொ.த.( சா.த) பரீட்சை(2008) இல் சித்தியடைந்து பரிசு பெறுவோர்*

### (திரு.நா.சிவஞானம் அவர்களின் அன்பளிப்பு)

01. செல்வன் த.கயன் 02. செல்வன் ஆ.கீர்த்திகன்

## சிறப்புப் பரிசு

## அமரர் திருமதி. அன்னபூரணாதேவி விபுதராசா ஞாபகார்த்த

## பொதுஅறிவுப் போட்டி

ஆரம்ப பிரிவு

1ம் பி.சாலமன் 2ம் த.விதுசாந்தன் 3ம் ப.கம்சத்வனி

கீழ்ப்பிரிவு

1ம் உ.தரணிகன் 2ம் ச.கௌதமன் 3ம் ந.கவிஸ்னா

கனிஷ்டபிரிவு

1ம் மு.தினுஜன் 2ம் ப.தனுஸ்ரன் 3ம் ஆ.தார்மிகன்

மத்தியபிரிவு

1ம் ந.கேதுஷன் 2ம் ர.லக்ஷிகன 3ம் மு.பார்த்தீபன்

மேற்பிரிவு

1ம் பு.கபிலா 2ம் ஆ.கீதாஞ்சலி 3ம் தெ.மேர்ஷி

## இவ்வாண்டின் சிறந்த மாணவர்கள்

01. செல்வன் செ. மணிமாறன் 02. செல்வி கு.தர்சிகா

# J/PUTHAKALADDY SRI VISHNU VIDIYALAYAM,PUTTUR.

## STAFF LIST -2009

| | | |
|---|---|---|
| 1. | Mr.k.Ravichandran | B.A, Dip in Edu, M.Ed SLPS 2-II (Princi) |
| 2. | Mr.S.Srirahavan | Trd. Hinduism, SLTS-2-II (V. P) |
| 3. | Mr.N.Mahendrarajah | Dip. in. Teach(Science) SLTS-2-II |
| 4. | Mrs.B.Uthayakumar | Trd. Home Science SLTS-2-I |
| 5. | Mrs.T.Subramanyam | B.A, SLTS-3-I |
| 6. | Mr.K.Raveendran | Trd. Primary, SLTS-2-II |
| 7. | Mr.K.Suntharaselvan | Spl.Trd. Maths, SLTS-2-II |
| 8. | Mrs.S.Sivasakthivel | B.A, Dip.in.Edu., SLTS-3-I |
| 9. | Miss.Y.Manickam | Trd. Primary, SLTS-3-I |
| 10. | Mr.S.Pirahasan | Dip. in. Teach(Sc),B.A,M.A,SLTS-2-II |
| 11. | Mrs.T.Nagulan | B.B.A, SLTS-3-I |
| 12. | Mrs.S.Karunamoorthy | B.A, SLTS-3-I |
| 13. | Mr.N.Sivakaran | Trd.( Agriculture) |

### Temporary Attachment

| | | |
|---|---|---|
| 1. | Mrs.A.Suntharaselvan | B.A, Dip. In. Edu. SLTS-3-I |
| 2. | Mrs.C.Thayaparan | Dip. In. Music, SLTS-3-I |
| 3. | Mr.K.Kapilan | Trd. English |
| 4. | Mr.N.Naventhan | B.A, SLTS-3-I |

### Voluntire Teacher

| | | |
|---|---|---|
| 1. | Mrs.T.Piratheepan | B.A |

# பாடசாலை நிகழ்வுகள்

## IT CAMP



## CERTIFICATE OF KIDS PRIGRAMME



**2009.07.28**

## விழாச்சிறக்க உதவி புரிந்தோர்

01. மக்கள் வங்கி - அச்சுவேலி

02. பனை தென்னை வள அபிவிருத்தி கூ.ச -அச்சுவேலி

03. பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - அச்சுவேலி

04. செல்வா ஹாட்வெயர் - அச்சுவேலி

05. விதுரன் ஹாட்வெயர் - அச்சுவேலி

06. நாதன் ஸ்ரோர்ஸ் - ஆவரங்கால்

07. திரு. இ சிவஞானம் J.P - ஆவரங்கால்

08. திரு. சோ. இராஜலிங்கம் - ஆவரங்கால்

09. திரு. வே. மாசிலாமணி - ஆவரங்கால்

10. திரு. ஆர். இளங்கோ(இளவரசி வணிபம்) -ஆவரங்கால்

11. திரு.இளையராசா(செல்லத்துரை)வைத்தியர் --ஆவரங்கால்

12. திரு.சந்திரசேகரம்(சந்திரன் ஸ்ரோர்ஸ்) --ஆவரங்கால்

13. திரு.பா.பாலரஜனிதரன்(கவியரசன்பான்சியகம்-ஆவரங்கால்

# COMPUTER LEARNING CENTER

# J/ SRI VISHNU VIDYALAYAM

நவீன வசதிகளுடன் கணினிப் பயிற்சிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடைபெறுகின்றன

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான...

## KIDS PROGRAMME

இடைநிலை மாணவர்களுக்கான....

## CERTIFICATE OF MICRO SOFT OFFICE - 2007

## ஆரம்பமாகவுள்ள புதிய பிரிவுகள்

முன்பள்ளி மாணவர்களுக்கான....

## KIDS PROGRAMME

பாடசாலையைவிட்டு விலகியவர்களுக்கான...

## DESKTOP PUPLICATION